[1971 டிசம்பர் 13

Tapioca Research Station, Salem

* 332. Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to have a tapioca research unit in Salem district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) 1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் நாளிலிருந்து சேலத்தில், மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்று செயல்படத் தொடங்கியுள்ளது.

(இ) இந்தியாவிலுள்ள, மரவள்ளி பயிரிடும் முதன்மைப் பகுதிகளிலிருந்தும், ஆராய்ச்சி நிலையங்களிடமிருந்தும், ஏனைய நாடுகளிலிருந்தும் பெறப்படும் மரவள்ளி விதைக் கிழங்குகள், ஏற்பளிக்கப்பட்ட பயிர்செய் முறைகள் மூலம் அதிக அளவில் பயிரிடுவதற்கென நமது உழவர்களுக்குப் பரிந்துரைக்கு முன்பு, அவற்றின் பயிர்க் காலம், கிழங்கு விளைச்சல். அவற்றில் அடங்கியுள்ள மாவுச் சத்து, நோய்களைத் தாங்கும் சக்தி ஆகியவை குறித்து ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதிக்கப்படுகின்றன.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether any hybrid tapioca has been discovered in that Research Station?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி ஒன்றும் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : மரச் சீனி பயிர் விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் ரூபாய் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வழங்கப் பட்டு அந்த ரூபாய் முழுவதும் மோசடி செய்யப்பட்டது. அப்படி மோசடி செய்தவர்கள் மீது வழக்குத் தொடர முடிவு செய்யப் பட்டது. அந்த வழக்கு எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : வழக்கு இப்போது பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதுபற்றி முடிவு செய்யப்படும்.

Cocoa Plantation

* 333 Q.—THIRU N. K. PALANISWAMY :
THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to encourage cocoa plantation in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) ஆம். வேளாண்மை மறுநிதிக்கழகம், வேளாண்மை நிதி உதவிக் கழகம் ஆகியவற்றிலிருந்து முறையே நிதி உதவி பெறுவதன் மூலம்

[1971 டிசம்பர் 13

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,000 ஏக்கரிலும் மதுரை மாவட்டத்தில் 2,000 ஏக்கரிலும் கோக்கோ பயிரிடுவதற்கான செயற்குறிப்பு ஒன்று வேளாண்மைத்துறை இயக்குநரிடமிருந்து வந்துள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : கன்னியாகுமரி மாவட்டத்தில் கோக்கோ பயிர் செய்யப்பட்டு இப்போது விளைவு எடுக்கப்பட்டு வருகிறது. அதை வாங்குவதற்கு ஆள் இல்லாமல் விவசாயிகள் வருந்துகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, அந்த கோக்கோ விளைபொருள்களை வாங்குவதற்கு அரசாங்கம் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரையில் இரண்டாயிரம் ஏக்கர் இதற்காக ஒதுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது எவ்வளவு ஏக்கரில் சாகுபடி செய்யப் பட்டிருக்கிறது. அதனுடைய பலன் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தனிக் கேள்வி போடவும்.

தென்னை தீவிர சாகுபடித்திட்டம்

* 334 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தென்னை தீவிர சாகுபடி திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுகிறது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தென்னை தீவிரசாகு படித்திட்டம், கோவை மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சியிலும் மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டியிலும் நடைபெற்று வருகிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, cocoanut is coming very nicely in the Dharmapuri and Salem districts. So, may I know whether any such crash programme would be implemented in those districts?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சேலம், தருமபுரி மாவட்டத்தில் இன்னும் செயல்படுத்த முடியவில்லை.

திரு. த. சோலையா : இரண்டு மாவட்டங்களிலே தென்னை அபிவிருத்தித் திட்டங்கள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இராமநாதபுரத்தில் இருக்கும் கடலோரப் பகுதிகளும், வைகை ஆற்று வண்டல் பகுதிகளும் தென்னை தீவிரச் சாகுபடிக்கு ஏற்ற அருமையான இடங்களாக இருக் கின்றன. அந்தப் பகுதிகளையும் அமைச்சர் அவர்கள் தென்னை சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளுவார்களா ?